## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

O.S.No.5/2022

PW1 வடிவேல் நாள் 22.03.2024

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என் தாத்தா பெயர் பிச்சைமுத்து. அவருக்கு முத்துசாமி, அய்யம்பெருமாள் , ஆறுமுகம் ஆகியோர் பிள்ளைகள். அழகம்மாள், பிச்சையம்மாள் அவருடைய மகள்கள். அழகம்மாள் வாரிசு இல்லாமல் இறந்துவிட்டார். பிச்சையம்மாள் உயிருடன் இருக்கிறார். பிச்சையம்மாளை இந்த வழக்கில் சேர்க்க வேண்டும் என்று தெரியாததால் சேர்க்கவில்லை. அவர் அத்தியாவசிய தரப்பினார் என்பதால் அவரை சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல. மூத்தவர் முத்துசாமியின் மகன் தான் 2–ம் பிரதிவாதி என்றால் சரிதான். அய்யம்பெருமாள் 1–ம் பிரதிவாதி என்றால் சரிதான்.ஆறுமுகம் என்னுடைய அப்பா. வழக்கு தாக்கல் செய்யும்போது என் அப்பா இறந்துவிட்டார். வாதிகள் ஆறுமுகத்தின் வாரிசுகள். பதில் அறிவிப்பை வழக்கறிஞர் படித்து காட்டி தெரிந்து கொண்டேன். பதில் அறிவிப்பில் என் அப்பா 3 அயிட்ட சொத்தை விற்றதாக சொல்லியுள்ளது என்றால் சரியல்ல. என் அப்பா ஒரு சொத்தை சாமிநாதனுக்கு விற்றார். அது பொது சொத்து அல்ல.05.09.1980 ல் என் அப்பா அப்துல் ஜப்பார் என்பவருக்கு 3 ஏக்கர் நிலத்தை விற்றுள்ளார் என்றால் சரியல்ல. 04.11.1982 ல் என் அப்பா பிச்சைமுத்து உடையார்க்கு 3 அயிட்ட சொத்துக்களை விற்றுள்ளார் என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்தை பச்சையம்மாளுக்கு ஈடு வைத்துள்ளார் என்றால் சரியல்ல. மும்தாஜ் என்பவருக்கு 02.09.1983 ல் ஈடு வைத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்கூறிய 5 ஆவணங்களில் என் அப்பா மட்டும் தான் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் குடிபோதையில் போட்டிருப்பார். ஒரு குடும்பத்தில் பாகம் பிரிந்தால் தான் பாகஸ்தர்கள் தனித்தனியாக கிரையம் ஈடு வைக்கமுடியும் என்றும், எனவே ஏற்கெனவே பாகம் பிரிந்துவிட்டது என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா அரசாங்கம் அவருக்கு ஒப்படைத்த நிலத்தை தான் விற்றார். 2–வது அயிட்ட சொத்து 2–ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு அரசாங்கம் ஒப்படைத்தது என்றும், அதில் நான் பாகம் கேட்கமுடியாது என்று சொன்னால் சரியல்ல. 1–ம் அயிட்ட சொத்து 2–ம் பிரதிவாதியின் அம்மா தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கியது என்றும், அதில் நான் பாகம் கேட்கமுடியாது என்று சொன்னால் அவருடைய அம்மா சொத்தில் நான் பாகம் கேட்கவில்லை. என் அப்பா கிரையம் செய்தது போல 1–ம் பிரதிவாதி அவருடைய அப்பா சொத்தை பாராதீனம் செய்துள்ளார் என்றும், அதை நான் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. 1964 ல்

லேயே என் அப்பாவும் அவருடைய சகோதர்களும் சேர்ந்து பாகம் பிரித்து கொண்டார்கள் என்றும், அதனால் நான் தற்போது பாகம் பிரிவினை கேட்கமுடியாது என்றால் சரியல்ல. என் அப்பாவும் அவருடைய சகோதர்களும் சேர்ந்து பாகம் பிரித்து கொண்ட சொத்தை அவர்அவர்களுடைய வாரிசுகள் பாராதீனம் செய்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், அதை நான் கேட்க முடியாது என்றால் சரியல்ல. சொத்துக்கள் 3-ம் நபருக்கு கைமாறி 10, 15 ஆண்டுகள் ஆகிறது என்றும், அதனால் நான் அதைபற்றி கேட்க முடியாது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.